**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **SC.No. 03/2009**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution** அ.சா.**15**
**Defence**
**Court**

**Name** **:**முத்துக்குமாரசாமி

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 21.12.2022

முதல் விசாரணை:

நான் தற்போது தென்காசி எல்.ஆர்.எஸ்பாளையத்தில் குடியிருந்துவருகிறேன். நான் கூலக்கடை பஜாரில் குருமெடிக்கல் என்ற பெயரில் கடை நடத்தி வருகிறேன். சம்பவத்தின்போதிலும் கடை இருந்தது. அலாவுதீனை தெரியாது. வழக்கிற்கு பின்னர் தெரியும். அவர் போலீசில் கொடுத்துள்ள புகார் பற்றியும் தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது.

2007 ம் ஆண்டு கலவரம் நடந்த விபரம் கேள்விப்பட்டேன். நான் கடைவைத்திருக்கும் பகுதியிலேயே கலவரம் நடந்ததாக கேள்வி பட்டேன். கடை திறக்க வரும்போதே கலவரம் என சொன்னதால் அப்படியே போய்விட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள். அ ப்போதும் இதைதான் சொன்னேன்.

**<u>இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது</u>**:-

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என்னை போலீசர் விசாரித்தபோது 14.08.2007 அன்று நான எனது கடையில் காலை 10.00 மணிக்கு திறந்து வியாபாரம் செய்ததாகவும் 14.08.2007 தேதி காலை 10.15 மணிக்கு நிபந்தனை கையொப்பம் போட்டுவிட்டு இருசக்கரவாகனம் மற்றும் ஆட்டோக்களில் மீரான் மைதீன் மகன் அலாவுதீன் TN 72 x0558 என்ற யமஹாபைக்கிலும் TN76b9579, TN 76B 4974 என்ற ஆட்டோக்களில் அபுஅயூப்அன்சாரி , செய்யது அலி, முருகேசன் என்ற அப்துல்லாவும், முகமது பசீர் அசன்கனி, நாகூர்மீரான், மசூது, மற்றும் சிலரும் சுமார் 10.15 மணியளவில் தென்காசி எல்ஆர்எஸ்பாளையம் கூலக்கடை பஜாரை கடந்து மவுண்ட் ரோடு என்ற பகுதியில் கிழக்கு நோக்கி சென்றுகொண்டிருந்தபோது முத்தாரம்மன் கோவில் அருகில் TN 72 Z 9757 என்ற வெள்ளை நிற அம்பாசிடர்காரை குமார்பாண்டியனின் சகோதரர்ககள் செந்தில், சக்தி பாண்டியன், கபிலன், சுப்பிரமணியன், சுரேந்திரன் ஆகியோர் முன்னால் சென்ற யமாகா பைக்கின் மீது மோதி அந்த ஆட்டோவை வழி மறித்து அரிவாளுடன் காரில் இருந்து இறங்கி வெட்டுங்கள், கொல்லுங்கள் என்று சக்தி பாண்டியன் கூற மற்றவர்களும் ஓடிவந்தனர் என்றும் உடன் வந்தவர்கள் அங்கிருந்து

மேற்காக ஓடியபோது முத்து டீக்கடை அருகில் இருந்த சேகர், மலையப்பன், தட்சணாமூர்த்தி, குட்டிமணி, சுரேஷ், பிஸ்தாமணி, சக்தி, கேபிள் டீவி முத்து, ஆட்டோ ரமேஷ், தங்கதுரை,அலெக்சாண்டர், இளநீர்கண்ணன், ஆகியோரும் அவர்களை சுற்றி வளைத்து தாக்கினார்கள் என்றும் அப்போது சுரேஷ் அரிவாளால் சைய்யது அலியை கழுத்தின் வலது பக்கம் மாறி மாறி வெட்டினார் என்றும் அபுஅயூப்அன்சாரி என்பவரை குட்டிமணி என்பவர் அரிவாளால் முதுகில் மாறிமாறி வெட்டினார் என்றும் கேபிள் டீவி முத்து அலாவுதீனின் தலையிலும், மீரான் மைதீன் வலது மார்பிலும் மாறி மாறி வெட்டினார் என்றும் சுரேஷ் அரிவாளால் முகமது பசீர் மற்றும் என்னை மாறி மாறி வெட்டினார் என்றும், தங்கதுரை ராஜாமுகம்மதுவை வெட்டினார் என்றும் அலெக்சாண்டர் அரிவாளால் நாகூர் மீரான் அசன்கனி ஆகியோர்களை வெட்டினார் என்றும் சக்தி பாண்டியன் முகமது பசீரின் தலையில் மாறி மாறி வெட்டினார் என்றும் சுரேந்திரன் அரிவாளார் முகம்மது பசீரின் தலையிலும் அசன்கனியின் வலது விலா மற்றம் தொடை பகுதியில் வெட்டினார் என்றும் மலையான் தெருவை சேர்ந்த சண்முகம் இருப்பு பட்டையால் அப்துல்லாவின் முகத்திலும் தலையிலும் மாறி மாறி அடித்தார் என்றும் செந்தில் அரிவாளால் அசன்கனியை வெட்டினார் என்றும் பிஸ்தாமணி என்பவரும் அரிவாளால் அசன் கனி, மற்றும் முகம்மது பசீர் ஆகியோர்களை வெட்டினார் என்றும் சேகர் அரிவாளால் அசன்கனியை மாறி மாறி வெட்டினார் என்றும் அந்த சம்பவத்தில் எதிரிகள் தரப்பில் சுரேஷ், செந்தில் என்ற செந்தில் குமார், சேகர் ஆகியோர் இறந்ததாக கேள்விப்பட்டேன் என்றும், கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த சம்பவத்தில் அபுஅயூப்அன்சாரி, சைய்யது அலி, அலாவுதீன், முருகேசன் என்ற அப்துல்லா, இராஜாமுக்கமது, நவாஸ், ஹனிபா ஆகியோர்களுக்கும்

வெட்டுக்காயங்கள் ஏற்பட்டது என்றும் போலீசார் விசாரித்தபோது கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. சக்திபாண்டியன் வகையறா இஸ்லாமியர்கள் மீது கொடுத்த புகார் மீதான வழக்கில் நான் சாட்சியாக உள்ளேன். அந்த வழக்கிலும் சம்பவம் பற்றி எனக்கு தெரியாது என்று தான் கூறினேன். இரண்டு வழக்கின் எதிரிகளுக்கும் ஏற்பட்ட ரகசிய உடன்படிக்கையின் படி இருதரப்பினரையும் காப்பாற்றுவதற்காக நான் அந்த வழக்கிலும் இந்த வழககிலும் போலீசார் விசாரணையின் போது கூறிய விபரங்களை மறைத்தும் சம்பவம் நடந்தபோது நான் சம்பவ இடத்தில் இருந்த விபரங்களை மறைத்தும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்திற்கு பின்னர் இருதரப்பிலும் தலா 3 நபர்கள் இறந்துபோனதாக செய்திதாள்களின் மூலம் தெரிந்துகொண்டேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>**